# தமிழ்

## வாசிப்பு நூல்

### தரம் - 1



முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

அச்சிடுதல் மற்றும் விநியோகம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

දෙමළ කියවීම් පොත (දෙ) - 1 ශ්‍රේණිය
தமிழ் வாசிப்பு நூல் (த) - தரம் 1
**SC01AC1T-2026/284/105,900**

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்

நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே


අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව විසින් සකස් කරන ලද වීඩියෝ ඊ තක්සලාව වෙබ් අඩවිය හා යූටියුබ් චැනලය මඟින් නැරඹිය හැකිය.
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் ஆக்கப்பட்ட வீடியோக்களை e- Thaksalawa இன் இணையத்தளம் மற்றும் youtube அலைவரிசைகளினூடாகப் பார்வையிட முடியும்.
Videos produced by the Educational Publications Department can be viewed via the website and the YouTube channel of e – thaksalawa.

https://www.e-thaksalawa.moe.gov.lk/

https://youtube.com/c/ethaksalawa-official

https://moe.gov.lk/students/nenasa-tv/

අන්තර්ක්‍රියාකාරී පාඩම්, වීඩියෝ පාඩම්, ශ්‍රව්‍ය ඉගෙනුම් ආධාරක, ක්‍රියාකාරකම් පත්‍රිකා, මාර්ගගත ප්‍රශ්නාවලි,පෙළපොත, අධ්‍යාපනික විනෝදාත්මක වැඩසටහන්, මාර්ගගත පාඨමාලා ඇතුළු තවත් අධ්‍යාපනික වැඩසටහන් සඳහා පිවිසෙන්න.
ஊடாடும் பாடங்கள், வீடியோப் பாடங்கள், செவிப்புல கற்றல் உதவிகள், செயலட்டைகள், நிகழ்நிலை வினாக்கள், பாடநூல்கள், கல்விசார் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், நிகழ்நிலை பாடநெறிகள் உட்பட மேலும் கல்விசார் நிகழ்ச்சிகளின் நிமித்தம் பிரவேசியுங்கள்.
Access for interactive lessons, video lessons, audio learning aids, activity sheets, online quizzes, textbooks, educational entertainment programs, online courses and more educational programs.

National Institute of Education
ChannelNIE
ජාතික අධ්‍යාපන ආයතනය
தேசிய கல்வி நிறுவகம்

වීඩියෝ වැඩසටහන්, පෙරහුරු ප්‍රශ්න පත්‍ර, ප්‍රායෝගික පරීක්ෂණ සහ සම්පත් පොත් යනාදී වටිනා අධ්‍යාපනික සම්පත් සඳහා පිවිසෙන්න
வீடியோ நிகழ்ச்சிகள், பயிற்சி வினாத்தாள்கள், செய்முறைச் சோதனைகள், வளநூல்கள் போன்ற பெறுமதியான கல்விவளங்களுக்காக பிரவேசியுங்கள்
Visit us for valuable educational resources; video programs, practice question papers, practical tests and resource books

# தமிழ்

# வாசிப்பு நூல்

## தரம் - 1

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.ac.lk

**தமிழ் - தரம் 1**
**வாசிப்பு நூல்**

**முதற்பதிப்பு 2025**

© தேசிய கல்வி நிறுவகம்
முழுப்பதிப்புரிமையுடையது

ISBN 978 - 624 - 6792 -17 - 6

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் - www.nie.ac.lk
மின்னஞ்சல் - info@nie.edu.lk

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
பாரமவுண்ட் சொல்யூசன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
50/21, கெமுனுபுர, கொத்தலாவெல வீதி, கடுவெலையில்
அச்சிடப்பட்டது.

Published by : National Institute of Education
Printed by : Paramount Solutions (Pvt) Ltd.
50/21, Gemunupura, Kothalawela Road, Kaduwela.

**வழிகாட்டல்**

**பேராசிரியர் மஞ்சுளா விதாணபத்திரன**

பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

**கலாநிதி தர்சன சமரவீர**

பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

**மேற்பார்வை**

**ஆர். எம். குமுதுமலி த சில்வா**

பணிப்பாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை

**பாட ஒருங்கிணைப்பு**

**நிர்மலா ஜயசிங்க**

சிரேஷ்ட விரிவுரையாளர்,

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை

**எழுத்தாளர் குழு**

**நிர்மலா ஜயசிங்க**

சிரேஷ்ட விரிவுரையாளர்,

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை

**வி. என். எஸ். உதயசந்திரன்**

பணிப்பாளர் (ஓய்வு) தமிழ்மொழித்துறை

தேசிய கல்வி நிறுவகம்

**செம்மையாக்கம்**

**எம். எச். எம். யாக்கூத்**

பிரதம செயற்றிட்ட அதிகாரி (ஓய்வு) தேசிய கல்வி நிறுவகம்

**சித்திரங்கள்**

**எஸ். பி முரளி**

ஆசிரிய ஆலோசகர் (ஓய்வு)

**அட்டைப்படம் மற்றும் பக்க வடிவமைப்பு**

**மு. நடேஷன் துஷாந்தன்**

கணினி வடிவமைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்

# அறிமுகம்

தரம் ஒன்றிற்காக ஆக்கப்பட்டுள்ள இந்த **"வாசிப்பு நூல்"** சிறு பிள்ளைகளின் கரங்களில் தவழ இருப்பதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

நீங்கள் இந்த புத்தகத்தை மிகவும் சிறப்பாகப் பயன்படுத்தி வாசித்தல் திறன் மற்றும் கிரகித்தல் திறனை விருத்தி செய்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

**"பந்திகள், கதைகள் மற்றும் உரையாடல்களை உரத்து உச்சரித்து வாசிப்பார்"** என்ற கற்றற் பேற்றினை அடையும் வகையிலே இந்தப் புத்தகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள பாடவிடயங்கள் உங்களுக்கு மிகவும் உறுதுணையாக அமையும்.


இந்த புத்தகத்தை நன்றாக வாசித்து அதிலுள்ள கருத்துக்களை உங்களது வாழ்க்கையுடன் இணைத்துக் கொண்டு நற்பிரசையாக உங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே எம் அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

**நிர்மலா ஜயசிங்க**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்.


## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வாசிப்போம் | 1 |
| 2. | பழம் | 2 |
| 3. | தேன்சிட்டு | 7 |
| 4. | முயலும் நண்பர்களும் | 8 |
| 5. | பிறந்தநாள் | 12 |
| 6. | பிராணிகள் மீது அன்பு | 17 |
| 7. | பிராணிகளுக்கு ஓர் உணவுத்தட்டு | 21 |
| 8. | நிலா | 25 |
| 9. | வண்ணத்துப்பூச்சி | 27 |





# மரம்


வயல்
பழம்



பாலா, நிசார்
அங்கே பாருங்கள்.

மரத்தின் மேலே பழங்கள்
மரத்தின் கீழேயும் பழங்கள்

நல்ல நல்ல பழங்கள்
நாங்கள் விரும்பும் பழங்கள்
மஞ்சள் நிறப் பழங்கள்
மணம் வீசும் பழங்கள்





மேரி, அங்கே பார்
பச்சை நிறக் கிளிகள்
மாலா, இங்கே பார்
கிளிகள் அருகில் அணில்கள்

அதோ பார் மேரி
சிறிய நீல நிறத் தேன்சிட்டு

மாலா, பறந்து பறந்து பூவில்
தேனைக் குடிக்கிறதே!



# தேன்சிட்டு

சிட்டு சிட்டு சிட்டு
சின்னஞ் சிறிய சிட்டு

மலரை விரும்பும் சிட்டு
மயக்கும் அழகுச் சிட்டு

சிறிய நல்ல சிட்டு
சிங்காரத் தேன்சிட்டு







# முயலும் நண்பர்களும்

பாலா முயலைக் கண்டான்.

நிசார் வாருங்கள்.
மேரி வாருங்கள்.
மாலாவும் வாருங்கள்.
முயலைப் பார்க்க ஓடி வாருங்கள்.

அதோ! முயல்
நான் முயலின் அருகில் போகலாமா?
என்று நிசார் கேட்டான்.



முயல் பயந்துவிடும்.
நாங்கள் தூரத்தில் இருந்து பார்ப்போம்
என்று பாலா கூறினான்.

# முயல்

காட்டு வழியே
முயல் ஒன்று
வந்தது.

அக்கம் பக்கம்
பார்த்தது.

செவியை மெல்ல
அசைத்தது.

துள்ளித் துள்ளிக்
குதித்தது.



# வெள்ளை முயல்



துள்ளித் துள்ளிப் புற்களின்
துளிர்களைக் கடித்திடுவாய்

தூய வெள்ளை நிறத்தில்
தூய அன்பைத் தந்திடுவாய்

உடலும் உனக்கு வெள்ளை
உள்ளமும் உனக்கு வெள்ளை



முயல் முயல் என்பாய்
முயலாது இருத்தல் சரிதானோ?



# பிறந்தநாள்

பிறந்தநாள் எல்லோருக்கும் மகிழ்ச்சியான நாள்.

நண்பர்களுக்கு இனிப்பைத் தந்து மகிழும் நாள்.



இன்று பாலாவின் பிறந்தநாள். பாலா அதிகாலையில் எழுந்தான். காலைக்கடனை முடித்தான். புதிய ஆடைகளை அணிந்தான்.

பாலா வரவேற்பறைக்கு வந்தான்.
நண்பர்களைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான்.



அப்பாவும் அம்மாவும் அங்கு காத்திருந்தனர்.
அக்காவும் அங்கிருந்தார்.

பாலா, பிறந்தநாள் வாழ்த்துக்கள்.
எல்லோரும் பாலாவை வாழ்த்தினார்கள்.
நண்பர்களுக்குப் பாலா நன்றி கூறினான்.

எல்லோரும் பலகாரங்களை உண்டனர்.
தேநீரும் பருகினர்.



நண்பர்கள் பரிசுகளைக் கொடுத்தனர்.
பாலா பரிசுகளைப் பெற்றுக் கொண்டான்.
பாலா நண்பர்களுக்கு நன்றி கூறினான்.

பாலா,
இந்த மாங்கன்று உனக்குத்தான்.
இது தான் நாங்கள் தரும்
பிறந்த நாள் பரிசு.



இதைத் தோட்டத்தில் நாட்டுவோம் என்று
அப்பா கூறினார்.

பாலா மகிழ்வுடன் மாங்கன்றை நாட்டினான்.

நான் தினமும் நீர் ஊற்றுவேன்.

நன்றாகப் பராமரிப்பேன் என்று பாலா கூறினான்.



பாலா, பிறந்தநாளன்று மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான்.

# பிராணிகள் மீது அன்பு

ஆசிரியை வகுப்பிற்கு வந்தார்.
பிள்ளைகள் ஆசிரியைக்கு வணக்கம் கூறினர்.

பிள்ளைகளே!
நீங்கள் பிராணிகள் மீது அன்பு
காட்டுகின்றீர்கள் தானே?
ஆம், நாங்கள் எல்லோரும் அன்பு
காட்டுகின்றோம்.



நாங்கள் பிராணிகள் மீது எவ்வாறு அன்பு செலுத்த வேண்டும்?



பிராணிகளுக்கு உணவு கொடுக்க வேண்டும்.

நீரும் கொடுக்க வேண்டும்.



பிராணிகளுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது.

நல்ல பிள்ளைகள். இவ்வாறு தான் அன்பு காட்ட வேண்டும்.

பிராணிகளுக்கு உணவும் நீரும் கொடுத்த பிள்ளைகள் கைகளை உயர்த்துங்கள்.

பிள்ளைகள் எல்லோரும் கைகளை உயர்த்தினார்கள்.

நல்ல பிள்ளைகள்.

நாங்கள் ஓர் இனிமையான பாடலைப் பாடுவோம்.





காக்கா காக்கா கரைந்து வா
காலையில் என்னை எழுப்ப வா

குயிலே குயிலே கூவி வா
குரலில் இனிமை கூட்ட வா

மயிலே மயிலே ஆடி வா
மயக்கும் அழகை இரசிக்க வா

கிளியே கிளியே விரைந்து வா
கிள்ளை மொழியைப் பேச வா

குருவி குருவி அருகே வா
கொஞ்சும் தமிழைக் கேட்க வா

புறாவே புறாவே பறந்து வா
புதிய செய்தி சொல்ல வா

\- வி.என்.எஸ்.உதயசந்திரன்

# பிராணிகளுக்கு ஓர் உணவுத்தட்டு



எங்கள் தோட்டத்தில் உள்ள
மாமரத்து அடியில்
நிழல் தரும் இடத்தில்
பறவைகளுக்கு ஓர் உணவுத்தட்டை
வைப்போம்.

அண்ணன் ஒரு நாளும்
தங்கை மறுநாளும்
பிராணிகளுக்கு உணவை
வழங்கத் தொடங்கினார்கள்.



பிராணிகள் உணவு உண்ட தட்டை மாலையில் சுத்தம் செய்வேன்.



அணில்களே! குருவிகளே!
கிளிகளே! மைனாக்களே!
காகங்களே! புறாக்களே!
காலையில் உணவை
உண்ண வாருங்களேன்!



அணில் உணவை எடுத்துக் கொண்டு மரத்தில் ஏறிக் கொள்ளும். குருவிகள் கூட்டம் உணவை கொத்தி உண்டு மகிழும்.

பிராணிகள் ஒற்றுமையாக உணவு உண்பதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது.



# நிலா

வட்ட நிலா வா வா
வண்ண நிலா வா வா
பட்டு நிலா வீசி வா
பாடுகிறேன் ஓடி வா

வெள்ளி நிலா வா வா
விண்வெளியில் ஆடி வா
அள்ளி நிலா வீசி வா
ஆடுகிறேன் ஓடி வா

தேன் நிலவே வா வா
தேய்ந்திட முன் வா வா
ஏன் தயக்கம் ஓடி வா
என்னுடனே ஆடவே.


- அம்பி



# வண்ணத்துப்பூச்சி

பாலா : வண்ணத்துப்பூச்சியே
காலை வணக்கம்.

வண்ணத்துப்பூச்சி : உங்களுக்கும்
காலை வணக்கம்.



பாலா : உங்களைக் கண்டதும் மகிழ்ச்சி
அடைந்தேன்.

வண்ணத்துப்பூச்சி : எனக்கும் மகிழ்ச்சியே!
நான் இங்கு தேன்
குடிக்க வந்தேன்.

பாலா : அப்படியா? எனக்குப் பிராணிகள் மீது அதிக அன்பு இருக்கின்றது.

வண்ணத்துப்பூச்சி : எனக்குத் தெரியும். நீங்கள் ஒருபோதும் பிராணிகளுக்குத் தொல்லை கொடுப்பதில்லை.



பாலா : தினமும் நாம் சந்தித்துக் கதைப்போம். சேர்ந்து பாட்டுப் பாடுவோம்.

வண்ணத்துப்பூச்சி : நன்றாகப் படியுங்கள். நல்ல பிள்ளையாக வாழுங்கள்.

பாலா : இப்போது ஒரு பாட்டுப் பாடுவோம்.



பூக்கள் நிறைந்த மாலை போல
பூவுலகில் இணைந்திவோம்.
ஒரு தாய் பிள்ளைகள் போல
ஒற்றுமையாய் வாழ்ந்திவோம்.

